பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**18 04 2026** **6 45**

சனிக்கிழமை காலை

<u>வணக்கம் - மாநில செய்திகள் வாசிப்பவர் - மிருதுளா</u>

**(Tune)**

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுக்கு **5** நாட்களே உள்ள நிலையில் மாநிலம் முழுவதும் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

**2.** திமுக அரசு நிறைவேற்றிய நலத்திட்டங்களால் மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருவதாக அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**3.** கடந்த **5** ஆண்டுகளாக திமுக கூட்டணிக் கட்சிகள் மக்கள் பிரச்சினைகளை வலியுறுத்தி போராடவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

**4.** தரமான கல்வியை வழங்குவதில் திராவிட கட்சிகளின் ஆட்சி தோல்வியடைந்துவிட்டதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி **5** விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவுக்கு **5** நாட்களே உள்ள நிலையில் மாநிலம் முழுவதும் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

வேட்பாளர்களை ஆதரித்து ஆங்காங்கே பொதுக்கூட்டங்கள், வாகனப் பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

வேட்பாளர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

வேட்பாளர்களுக்கு ஆதரவாக அரசியல் கட்சித் தலைவர்கள் பொதுக்கூட்டங்களில் உரையாற்றி வருகின்றனர்.

பிரச்சாரம் நிறைவடைய இன்னும் சில நாட்களே உள்ள நிலையில் தேசிய தலைவர்களும், பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்களும் தங்களது கட்சி சார்ந்த வேட்பாளர்களுக்காக மாநிலத்தில் பிரச்சாரம் செய்ய உள்ளனர்.

இந்நிலையில் மாநிலத்தில் தேர்தலை அமைதியாகவும், சுமுகமாகவும் நடத்தி முடிக்க தேவையான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

பதற்றமான தொகுதிகள் என்று கண்டறியப்பட்டுள்ள இடங்களில் கூடுதல் பாதுகாப்புக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

திமுக அரசு நிறைவேற்றிய நலத்திட்டங்களால் மக்கள் ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருவதாக அக்கட்சியின் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல்லில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், மாநில உரிமைகளைப் பாதுகாப்பதில் திமுக தலைமையிலான அணி முன்னணியில் இருப்பதாக கூறினார்.

தமிழகத்தில் திமுக ஆட்சியின்போதுதான் உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழகத்திற்கு மத்திய அரசு போதுமான நிதியை வழங்கவில்லை என்றும், இதனால் மாநில அரசு தனது சொந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு நலத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளதாகவும் திரு. ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

கடந்த 5 ஆண்டுகளாக திமுக கூட்டணிக் கட்சிகள் மக்கள் பிரச்சினைகளை வலியுறுத்தி போராடவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலம் மாவட்டம் மேட்டூரில் நேற்றிரவு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது இதனைத் தெரிவித்த அவர், தமிழகத்தில் ஒரே கூட்டணியில் உள்ள கட்சிகள் கேரளாவில் எதிரெதிர் அணியில் செயல்பட்டதை சுட்டிக்காட்டினார்.

சிறுபான்மை மக்களுக்கும் பாதுகாப்பற்ற மாநிலமாக தமிழகம் திகழ்வதாகவும் அவர் கூறினார்.

அஇஅதிமுக ஆட்சியின்போது தமிழகம் வருவாய் பற்றாக்குறை இல்லாத மாநிலமாக இருந்த தாகவும், ஆனால் திமுக ஆட்சியில் நிர்வாக திறமையின்மை காரணமாக மக்கள் மீது ஏராளமான வரிகள் திணிக்கப்பட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

<<<<>>>>

மாநிலத்தின் உரிமைகளைக் பாதுகாக்க திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறுவது அவசியம் என்று மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் திரு. கமல்ஹாசன் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், திமுக அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்ததோடு அவற்றை கடந்த 5 ஆண்டுகளில் செய்து முடித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் திமுக தலைமையிலான அணிக்கும், அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் இடையேதான் போட்டி இருப்பதாகவும் திரு. கமல்ஹாசன் கூறினார்.

<<<<>>>>

நாடாளுமன்றத்தில் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட கட்சிகள் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவுக்கு எதிராக வாக்களித்திருப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவினாசியில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மகளிர் அதிகாரம் பெறுவதை இந்தக் கட்சிகள் விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

இலவச திட்டங்களை தமிழக பெண்கள் விரும்பவில்லை என்றும், போதைப்பொருட்கள் புழக்கமில்லாத, பெண்களுக்கு பாதுகாப்பான சூழலைத்தான் அவர்கள் விரும்புவதாகவும் கூறினார்.

கடந்த ஓராண்டில் மாநிலத்தில் இளம் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பல மடங்கு அதிகரித்துள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

திமுக, அதிமுக என பல ஆண்டுகள் தமிழகத்தை திராவிட கட்சிகள் ஆட்சி செய்தபோதும் தரமான கல்வியை ஏன் வழங்க முடியவில்லை என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கேள்வி எழுப்பியுள்ளார்.

சென்னை பல்லாவரத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அவர், இந்த கட்சிகளின் 60 ஆண்டுகால ஆட்சியில் மாநிலத்தின் தலைநகர் சென்னையிலேயே முறையான மழைநீர் வடிகால் வசதி செய்யப்படவில்லை என்று கூறினார்.

ஒவ்வொரு ஆண்டும் மழைக்காலத்தின்போது பொதுமக்கள் பாதிக்கப்படும்போது நிவாரணம் வழங்குவதோடு அரசு தனது கடமையை முடித்துக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

இனி தேர்தல் களம்...

(சவுண்ட் பைட் - மியூசிக் - 15 செகண்ட்ஸ்)

தமிழக சட்டப்பேரவை தேர்தலையொட்டி, தொகுதி வாரியாக எமது செய்தியாளர் வழங்கும் இந்த தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது திருநெல்வேலி மாவட்டத்திற்கு உட்பட்ட தொகுதிகள்.

**(வாய்ஸ் பைட் - தொகுப்பு - 180 செகண்ட்ஸ்)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த ஈரானுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

------------

கோவை மாவட்டம் வால்பாறை மலைப்பாதையில் நேற்று சுற்றுலா வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்தனர்.

------------

சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு காஞ்சிபுரத்தில் நேற்று வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது.

------------

அவினாசி தொகுதியில் வாக்காளர்களுக்கு பணம் அளிப்பதாக வந்த தகவலை அடுத்து தேர்தல் பறக்கும் படையினர் வீடுகளில் சோதனை நடத்தினர்.

------------

திருப்பூர் மாவட்டத்தில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு பிரெய்லி எழுத்துக்களால் அச்சிடப்பட்ட வாக்குச்சாவடி சீட்டு வழங்கும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலர் நேற்று ஆய்வு செய்தார்.

------------

தருமபுரி மாவட்டத்தில் சட்டப்பேரவைத் தொகுதியில் பதிவாகும் வாக்குகள் எண்ணப்படவுள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட தேர்தல் அதிகாரி திரு. சதீஷ் நேற்று ஆய்வு செய்தார்.

------------

தமிழக-கேரள எல்லையில் அமைந்துள்ள மங்கள தேவி கண்ணகி கோவிலில் சித்திரை முழு நிலவு விழாவுக்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சியர் திரு. தினேசன் நேற்று அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார்.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

**ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் கொல்கத்தா அணியை வென்றது.**

**அகமதாபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 180 ரன் எடுத்தது.**

**181 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய குஜராத் அணி 19 புள்ளி 4 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது.**

**<<<<The End>>>>**